Stories and Incidents from Epics and Puranas:-No. 1

மனுநீதிகண்ட சோழன்

அல்லது

அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ

(பெரிய புராணத்தினின்று எடுக்கப்பெற்றது.)

Manunithikanda Chola

or

Is Royalty so very easy?

(A historic incident retold from Peria Puranam)

BY

Mudikondan R. VISVANATHA IYER,

WITH AN INTRODUCTION BY

M. R. Ry. N. Panchapakesa Iyer B. A. L. T.

LECTURER IN MATHEMATICS,

FINDLAY COLLEGE, MANNARGUDI.

MUDIKONDAN.

 1918 [*Price* 0-2-6

PRINTED AT THE VARTAKA MITRAN, PRESS
TANJORE

ஆக்கியோன் குறிப்பு.


சைவபுராணங்களுள் உயரியதான பெரியபுராணமெனப் பெயர்வாய்ந்த திருத்தொண்டர் புராணமென்னும் அரியநூலில் திருவாரூர்ச் சிறப்பு அல்லது மனுநீதிகொண்ட புராணமென்னும் அதிகாரத்தை முதநூலாகக் கொண்டுள்ளது இச்சரிதை. பெரிய புராணமியற்றியவர் சேக்கிழார் குடியிற்பிறந்த அருண்மொழித்தேவர். சமணமதம் ஓங்கிச் சைவமதந் தாழ்ந்துநின்ற காலத்தில், அநபாய சோழனென்னும் மன்னனையும் அவனது பிரஜைகளையும் கடைத்தேற்றி வைக்கும்வண்ணம் மன்றுளாடியான நடேசவள்ளலின் அனுக்ரகத்தால் "உலகெலாம்" என்றாரம்பித்து இந்நூலைப் பாடிமுடித்தனர் சேக்கிழார்

மனுச்சோழன் 4,500 வருஷங்களுக்கு முன் திருவாரூரில் அரசாண்ட ஓர் சோழமன்னன். அவனது சரிதை சிலப்பதிகாரத்திலும், கலிங்கத்துப்பரணியிலும் காணப்பெற்றிருக்கின்றன. சிங்களதேசத்து மகாவமிசமென்னும் நூலில் இவனது சரிதம் ஏலேலனென்னும் மன்னனின் பெயரால் கூறப்பட்டிருக்கின்றது. பலநீதிகள் நிறைந்த இவனது புராணம் அனைவற்றினும்,

"இறைகாக்கும் வையகமெல்லாம் மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்"

என்னும் திருக்குறள் வசனத்தை நன்கு மெய்ப்பிக்கின்றது.

இச்சிறிய புத்தகத்திற்கு நூன்முகமெழுதியருளிய ஸ்ரீமான் N. பஞ்சாபகேசய்யரவர்களுக்கு இதனை யாக்கிய அவரது இனிய சீடன் பெரிதும் கடமைப்பட்டுள்ளான்.




இப்பொழுது எவ்விடங்களிலும் மதவிஷயமான கல்வி அவசியமென்றும் அதை உபதேசித்து ஸநாதன தர்ம முதலிய புத்தகங்களைப் பாடங்களாக வைத்துப் படித்துவருவதைவிடப் பல மதாசாரியர்களாகிய அப்பர், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் முதலிய பெரியோர் சரிதங்களை வாசிப்பது, வாசிப்பவர்கட்கு நற்றுணை நற்செய்கைகள் படியும்பொருட்டு பாரதம், இராமாயணம், அரிசந்திர புராணம் முதலிய பழைய நூல்களைப் படிப்பதுமே விசேஷமெனப் பற்பல கனவான்கள் சொல்லுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆகையால் நமது ஸ்ரீ ஜீவநாதய்யரவர்கள் அச்சிடுகிற மனுநீதி கண்ட சோழன் முதலிய கதைகள் இப்பொழுது நமது கலாசாலைகளில் கற்கும் மாணவர்கட்கு அதிக பயனைத் தருமென்பதில் எனக்குச் சற்றேனும் ஐயமில்லை. மேலும் இப்புத்தகப் பிரதிகளை நான் பார்த்ததில் அவைகள் எழுதப்பட்டிருக்கும் நடை பன்னிரண்டு பதின்மூன்று வயதுள்ள மாணவர்கட்கு நன்கு விளங்கும்படியாகவே இருக்கிறது. ஆகையால் இப்புத்தகங்களை அனைவரும் ஆவலோடு அங்கீகரித்துப் பல வகுப்புகளிலும் பாடமாக வைப்பார்களென்று நம்புகிறேன்.

N. பஞ்சாபகேசன்,

Lecturer in Mathematics,

FINDLAY COLLEGE,

MANNARGUDI.



பாயிரம்.

"உலகெலா முணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

வாழ்த்து

"மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்களெங்கும் பரவுக வறங்களின்ப
நல்குக வுயிர்கட்கெல்லா நான்மறைச் சைவ மோங்கப்
புல்குக வுலகமெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க"

மநுநீதி கண்ட சோழன்.

பூர்வகாலத்தில் தென்னிந்தியாவில் பல ராஜ்ஜியங்கள் செழித்து வந்தன. அவைகளில் சோழநாடென்பது மிகப் பிரபலமடைந்திருந்தது. அது காவிரியென்னும் புண்ணிய நதியால் பாயப்பெற்று வெகு செழித்தோங்கியிருந்தது. அதன் செல்வம் அளவற்றது. அதன்பிரஜைகள் ஒரு கவலையுமற்று வாழ்ந்திருந்தனர். அதன் மன்னர்களும் நீதிநெறி தவறாத புனிதர்களாவர். அக்காலத்தில் மாதம் மும்மாரி பொழிந்தது. அந்நாட்டில் தரித்திரமென்பதும், துக்கமென்பதும், அகாலமரணமென்பதும், குறையென்பதும், பொய்யென்பதும் இன்னதென்றுகூட ஒருவரும் அறியா வண்ணம் ஜனங்கள் வாழ்ந்து வந்தனர். இத்தகைய அரசாட்சியிலும் உயர்ந்தது வேறெதிலேனும் உண்டோ?

அவ்விதம் அரசாண்ட மன்னர்களுள் மநுச்சோழன் என்பவன் ஒருவன். அவனுக்குத் தலைநகர் திருவாரூரென்னும் ஓர் புண்ணிய ஸ்தலம். அவ்வூரில் தெய்வலோகத்திலின்று பூலோகத்துக்கு வந்த தியாகராஜேசர் விளங்கி வருகின்றார். அம்மநுச்சோழன் சோழநாட்டை வெகு செவ்வனே அரசாண்டு வந்தான். ஆனால் அவனுக்கு வயது அதிகமாகியும் புத்திரன் உதிக்கவில்லை. 'புத்திரன் இல்லாத மனிதன் என்ன ஜன்மம்!' என்று அவன் வெகு வருத்தப்பட்டான்.

பலதானங்களும் தருமங்களும் செய்து பார்த்தான். எவ்வளவோ கோவில்கள் கட்டினான். ஒன்றும் பலியாமற் போகத் 'தியாகராஜத் தெய்வமே கதி' என்று மனம் தேர்ந்து, தன் மனைவியுடன் தினம் தொழுது தியாகேசர் சந்நிதியில் சென்று, அவரை

2

பக்தியுடன் பஜித்து வந்தான். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்றபடி மனுச்சோழன் காரியமும் பலியாமற் போகவில்லை. தியாகேசப் பெருமான் மன்னனின் வேண்டுகோளுக்கு மனமிரங்க, அவனது தேவி சீக்கிரத்தில் ஓர் சுந்தர மைந்தனை ஈன்றாள்.

வெகு நாள் தவம் செய்து மைந்தன் பிறந்தானாகையால், மன்னன் வெகு சந்தோஷமடைந்து விசேஷமான தானதருமங்கள் செய்தான். குடிகள் அன்று முதல் பன்னிரண்டு வருஷம் வரையில வரிகொடுக்க வேண்டாமென்றும், சிற்றரசர்கள் ஏழு வருஷம் வரையில் கப்பஞ்செலுத்த வேண்டாமெனறும் ஆஞ்ஞாபித்தான். சிறையிலிருந்த கைதிகளை விடுதலையாக்கினான். நாடெங்கும் இன்பமே மேலிட்டிருந்தது. கோயில்களிலெல்லாம் திருவிழாக்கள் நடந்தன.

அருமையாகப் பிறந்த குழந்தைக்கு வீதிவிடங்கனென்று பெயரிட்டார்கள். அவனும் நாளொரு மேனியும பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். அவனைக் கண்டோரெலாம் அவன் வெகு அதிர்ஷ்டசாலி என்றார்கள். ஐந்து வயதானதும் அரசன் அவனுக்கு வித்தியாப்பாசம் செய்வித்து நல்ல குருக்களிடம் ஒப்புவித்தான். ஒன்பதாம வயதில் உபநயனம் செய்வித்து வேத அத்யாயனமும் செய்விக்க ஏற்பாடு செய்தான். கொஞ்ச நாட்களுள் வீதிவிடங்கன் சகல சாஸ்திரங்களையும் கற்று வெகு நிபுணனாயினான். யானையேற்றம் குதிரையேற்றம விலவித்தை முதலிய இராஜனுக்குரிய பலவித்தைகளிலும் இவனுக்கு ஒபபானவர் எவருமிலலையென்று சொல்லும்படி விளங்கிவந்தான். அவனது அன்பையும ஆசாரத்தையும் ஒழுக்கத்தையுங்கண்டு ஆச்சரியப்படாதோர் எவருமிலலை. அவனது தேர்ச்சியை யுணர்ந்த அரசனும் அவனுக்கு இளவரசுப் பட்டங்கட்டத் தீர்மானித்தான்.

3

இப்படியிருக்கும் நாட்களில் ஓர் நாள் வீதிவிடங்கன் தன்னைப்போன்ற சில ராஜகுமாரர்களுடன் பிதாவை வந்து வணங்கி 'பிதாவே! சர்வவல்லமை பொருந்திய ஸ்ரீ தியாகேசப் பெருமானைத் தரிசிக்க வெகு ஆவலுள்ளவனாயிருக்கிறேன். சகல ஜீவன்களுக்கும் பிதாவான அப் பரமபுருஷனைத் தரிசனம் செய்து வர அனுமதி கொடுத்தருள வேண்டுகின்றேன்.'' என்று பணிந்து விண்ணப்பித்தான். அதைக் கேட்டு மனுவேந்தன் வெகு சந்தோஷமடைந்து தன் மைந்தனை மார்போடணைத்து முத்தமிட்டு 'என்னருஞ் செல்வனே! உனக்கு இவ்வைதீக ஞானம் உதிக்குமாறு நான் செய்த பயனென்ன! குழந்தாய்! உன்னை அவ்வீதிவிடங்கப் பெருமானின் கருணையாலேயே பெற்றேன். அன்னவரைப் போய் தரிசனம் செய்ய வேண்டுமென்று நீயாகவே கேட்கும்போது நான் மாறுமொழி உரைப்பதும் உண்டோ? ஆகையால் உனக்கு வேண்டுவனவற்றை எடுத்துக்கொண்டு தேவ சன்னதிக்குச் சுகமாகச் சென்று அத்தயாபரனைப் பணிந்து வருவாய்'' என உத்திரவிட்டான்.

வீதிவிடங்கனும் பிதாவை வலம் வந்து நமஸ்கரித்துப் பின்பு அன்னையின் அரண்மனைக்குச் சென்று அவளுடைய அனுமதியையும் வேண்ட, அவள் தன்னையறியாமல் உவகை பூத்து, பெருமகிழ்வுடன் அவனைத் தழுவி உச்சிமோந்து ஆனந்த பாஷ்பம் பொழிய, 'என் கண்மணியே! என்ன தவம்புரிந்து உன்னைப் பெற்றோம்! என் உயிரே! உன் வேண்டுகோளை நானோ மறுதளிப்பேன். அதுவும் தெய்வீகமான காரியத்தில் உன் புத்தி செல்லும்பொழுது நானோ அதற்கு இடைநிற்பேன். என் அன்பே! நீ உடனே தியாகேசன் கோவிலுக்குச் சென்று அவரை வணங்கி, உன் உபநயனம் முதலான மங்களக்கோலங் கண்ட என் கண்கள் சீக்கிரம் மணக்கோலமுங் காண அனுக்கிரகம் பெற்றுவா'' என்று சொல்லியனுப்பினாள்.

[illegible] ஷேகத்துக்கு [illegible] வேண்டிய சாமான்களெல்லாம் செய்யப்பட்டன. [illegible], [illegible], [illegible] [illegible], முனை [illegible] வசமதாபரிக்கப் பட்டன. [illegible] வாச நீராடி, வெண்பட்டு [illegible] தியானத்துடன் திருநீறு தரித்து, [illegible], கிரீடம், குண்டலம், கண்ட சரம், வாகுவலயம், பதக்கம், சரப்பளி, கடகம், ஆழி, பொற்பூணூல், பொன்னரைஞாண், ஒட்டியாணம், வீரகண்டை முதலான பூஷணங்களும் பூண்டு, ஜோதி மயமான பீதாம்பர உத்தரீயம் மேலே தரித்து நவரத் னமிழைத்த ஒரு பொற்பிரம்பைக் கையிற் பிடித்துக் கொண்டு, அரண்மனை வாசலைவிட்டு வெளியே புறப் பட்டு, வேதியர்கள் முதலானவர்களுக்குப் பலவித தானங்கள் செய்து, மகாவேகமான நடையுள்ள நான்கு குதிரை கட்டிய ஓர் ரதத்தின் மேல் ஆரோ கணித்துக் கொண்டான். வேதியர்கள் மந்திர மொழி களை ஜபித்தனர். வாத்திய கோஷங்கள் முழங்கின. ஸ்திரீகள் மங்களம் பாடினர். அந்நகரிலுள்ள அரசி ளங்குமாரர்கள் யாவரும் அவரவர்களுக்குத் தகுந்த வாகனங்களின் மேலேறி அலங்கரித்துக் கொண்ட னர். ஆலவட்டங்கள் பறந்தன. வெண்சாமரை வீசியது. வெண்குடைகள் நிழலை ஈந்தன, கட்டி யக்காரர்கள் கட்டியங் கூறினர். நாடகக் கணிகை யர் நடனம் புரிந்தனர். இவ்வித வைபவங்களோடு வீரசிங்கன் தன் தேரை நடத்தினான்.

அவனது திருமேனியையும், ஸரஸ்வதி கடாக்ஷம் பெற்ற முகத்தையும், ஒப்பில்லாத அவனது அங்கங் களையும், மலர்ந்த முகத்தையும், வீரத்தன்மை நிறைந்த பார்வையையும் கண்ட எவரும் வெகு ஆச் சரியப்பட்டு 'இவனைப் பெற நம் அரசரும் அரசி யும் என்ன பாக்கியம் செய்தார்களோ? இவனை நமது இளவரசாகப் பெற நாம்தான் செய்த புண்ணியம்

பரமேசா! [illegible] அருள் [illegible] இருந்து எவர் வந்தாலும் [illegible] தோடே! [illegible] னைப்பெற்ற பயத்தால் இப்பொழுது [illegible] வாறு பலவிதமாய்த் துதித்தார். [illegible] வந்து கூடினர். எல்லோரும் [illegible] ராஜவீதியில் [illegible] மீது இருந்தனர். அவனும் புன்னகையுடன் யாவருக் கும் வந்தனாபரிகாரஞ் செய்து கொண்டிருந்தான்.

இப்படி அவன் வீதியில் போய்க்கொண்டிருக்கும் பொழுது தேர்க்குதிரைகள் சற்று வேகமாகச்சென் றன. அவ்வீதியிலோ கூட்டம் வெகு அதிகம். அத் தருணத்தில் ஓர் தாய்ப்பசு பின்னேவர அதன் இளங் காளைக்கன்று பயமறியாமல் ஓடிவந்து ஒருவருக்குந் தெரியாமல், மயங்குண்டு தேரின்கீழ் விழ, தேர்ச்சக்கரம் அதன்மேல் ஏறி அதை நன்றாய் அரைத்து விட்டது.

அது உடல்முறிந்து, குடல்சரிந்து, அரைப்பட் டதைக்கேட்ட வீதிவிடங்கன் இடியோசை கேட்ட நாகம் போல் திடுக்கிட்டு, அறிவழிந்து, மயங்கி, ஒன் றுந்தோன்றாமல் கீழேவிழுந்து மூர்ச்சையடைந்தான். பின்பு சற்றுத்தேர்ந்து, இறந்து கிடந்த கன்றை நோக்கிக் கண்ணீர் விட்டு 'சிவசிவா! சங்கரா! மகா தேவா! தியாகேசா! என் ஐயனே! என்னையும் இப் படிப்பரிசோதிக்கலாமா? தங்களைத்தரிசனம் செய்ய வந்த எனக்கு இத்துன்பத்தையோ விளைவிப்பது! ஏ ஜகன்னாதா! நானென்னசெய்வேன்! மிருகங்களுக்கு எல்லாம் உத்தமமான இப்பசுங்கன்றோ என்னால் கொ ல்லப்படுவது! ஜகதீசா! இப்பாபத்திற்கு நான் செய் யக்கூடியதென்ன! என் ஐயனே! தங்களைத்தரிசனம் பண்ணவருபவன் பயபக்தியோடு நடந்து வரவேண்டி யிருக்க என் செல்வச்செருக்கினால் தேரூர்ந்து வந்தே ன்! ஐயோ! என் பிதாவின் காதுகளில் இச்சமாசாரம் விழுமாகில் அவர் யாது செய்வரோ! ஏ! ஈசனே! என் னை இப்படியும் சோதிக்கலாமோ?

"குற்றமென்பதே அறியாத என்குலத்திற்கு ஓர் கோடரிக்காம்பானேனே? ஐயோ! என் பிதாவின் பய ந்த கௌரவத்தைப் பாழாக்கவோ நான் பிள்ளையாகப் பிறந்தேன். ஹாஹா! நான் கற்றகல்வியும் கேள்வியும் அவலமாயிற்றே! என்ன செய்வேன்! சரி! மனுச் சோழர்காலத்து அவர் புத்திரனே ஓர் செங்கன்றைக் கொன்றானென்றவோர் பெரும்பழியை நிலைநிறுத்தின னெனக்குப்பிராயச்சித்தம் என்னவிருக்கின்றது? கொ லைக்குக்கொலை செய்து கொள்வதே தகுதி" என்று பலவாறாகப்புலம்பி அவ்விடத்திலேயே அவன் உயி ரைத் துறக்கத்தயாராயிருந்தான்.

அதனையறிந்த அமைச்சர்களும் அந்தணர்களும் அவனை வெகுவாய் தேற்றி "இராஜகுமாரரே! தாங்கள் ஓர் அற்பக்கன்றின் சாவைக்குறித்து இவ்வளவு துக் கிக்கலாமோ? அதைத்தாங்கள் அறிந்தா கொன்றீர் கள்? இல்லையே! ஆதலால் அதைக்குறித்துத்தாங்கள் இவ்வளவு வருந்தவேண்டாம்" என்றனர். அதைக்கே ட்ட வீதி விடங்கன் கண்ணீர் சொரிந்து 'அமைச்சர் களே! நீங்கள் நன்கு மொழிந்தீர்கள். இக்கன்றை அற்பம் என்றீர்கள். பூர்வகாலத்தில் எங்கள் வமிசத் தில் உதித்த சிபி என்னும் சக்ரவர்த்தி ஓர் புறாவின் உயிரைக் காப்பாற்றத் தன்னுயிரைக் கொடுக்கவில் லையா? அப்படியிருக்க, அவர் வமிசத்தில் பிறந்த யான் அறியாத ஓர் இளங்கன்றை என் செல்வச்செருக் கினால் மதியாமல் அரைத்தது ஓர் சாதாரணக்குற்ற மோ? அரசனெனப் பிறந்தவன் தன் பிரஜைகளுக்கு ஒரு தீங்குமில்லாமல் காப்பாற்றவேண்டியிருக்க, அவ னே அவைகளின் உயிருக்கு ஆபத்தாய் விளைவதென் பது கொடுமையினும் கொடுமையன்றோ? அந்தணர்க ளே! இக்கன்றைப்பாருங்கள். இது எங்கு பிறந்ததோ? எங்கு வளர்ந்ததோ? எதையுத்தேசித்து எங்கு சென் று கொண்டிருந்ததோ? எவ்வளவு ஆனந்தத்துடன் துள்ளிவந்ததோ? இப்பாபித் தேர்க்கால் அதன் மீது

பட்டபோது என்ன நினைத்ததோ? அதன் மனம் என் னபாடு பட்டதோ? ஐயோ! தன் தாயைக்குறித்து வருந்தியதோ? என்னைச்சபித்ததோ! ஐயோ! அதன் நிலைமை எவ்வாறிருந்ததோ? ஒரு சிறுமுள் தைப் பினும் நம்முடல் என்னபாடுபடுகின்றது? அப்படி யிருக்க ஓர் பெருந்தேர் மேலூர்ந்தால் அது எவ்விதம் இருக்கும்! ஆதலால் இப்பெரும் பாபத்தைத் தீர்க்க என் உயிரையும் தேரிலிட்டு வதைப்பதே சரியான வழி. இதைத் தாங்கள் மறுக்காமல் எனக்கனுமதி கொடுக்கவேண்டும்'' என்று விண்ணப்பித்தான்.

அதுகேட்ட அப்பெரியோர்கள் அவனை நோக்கி 'ராஜபுத்ரனே! தாங்கள் ஏதோ ஓர் பெரும் துக்கத்தில் ஈடுபட்டு இவ்விதம் பேசுகின்றீர்கள். நாங்கள் பல சாஸ்திரங்களை ஆராய்ந்திருக்கிறோம். மேலும், முன் னொன்று சொல்லிப் பின்னொன்று பேசுபவர்களல்லர். ஓர் அற்பகாரியத்திற்காக எங்கள் மனச்சாட்சியை விற் பவர்களுமல்லர். ஆதலால் நாங்கள் சொல்வதைச் சற்றுக்கேளும். இப்பசுங்கன்றின் தலையில் இன்ன படி இறக்க வேண்டு மென்று விதித்திருந்தபடியால் இங்கு வந்து இறந்ததேயன்றி இதன் கொலைக்கு ஒரு வரும் காரணமாகார். இல்லாவிட்டால் ஆயிரக்கணக் கான ஜனங்கள் கீழே நிறக அவர்கள் கண்ணிலெல்லாம் மண்ணைப் போட்டுவிட்டு இறக்குமா! ஆதலால் இத ற்குச் செய்யத்தக்கதொன்றுமில்லை. ஆயினும், நீர் வெ ரு சஞ்சலப்படுவதால் வேதாகமங்களில் கூறியுள்ளபடி சிலபிராயச்சித்தங்களை செய்து கொள்ளலாம். முதி யோரான எங்கள் வார்த்தையைத்தட்டாமல் தேரின் மீதேறும்'' என்றனர்.

வீதிவிடங்கன் ஒன்றும் தோன்றாமல் பிரமித்து அறிவிற்பெரியோர்களான அந்தணர்களின் ஆஞ்ஞை யை மறுத்தல் பாபமென அஞ்சி, 'ஐயா! பெரியோரே! நான் வருந்துவதில் பயனென்ன? நான் ஒருவன் எதைக் குறித்துத் துயரப்படமுடியும்? என் வயிச

மனைத் பாழாக்கினேனே! பாவியாகிய யான் ஆறாத் துயரத் துக்கத்துக்குக் காரணமானேனே! நானினித் துயரை நுகரப் போகின்றேன்! தங்கள் வார்த்தையைத் தட்டினேன். பெரியோர் வார்த்தையைத் தட்டின அபராதத்துக்கு ஆளாகவேண்டும். ஆகையால் பெரியோர்களே! தங்கள் இஷ்டப்படி இன்று தேரில் ஏறுகின்றேன். என்னை எப்படியாவது பரிசுத்தமாக்க வேண்டியது உங்கள் பொறுப்பு." என்று சொல்லிவிட்டு அக்கணமே சோகம் கண்ணீர் சொரிந்துகொண்டே தேரின் மேலேறி ...ருக்காலயத்தை நோக்கி ஏகினன்.

இதற்குள்ளாக அந்தப் பசு தன் கன்றைக் காணாமல் பல திசைகளிலும் தேடிக் கடைசியாக அது இறந்து கிடந்த இடத்தையடைந்து, கீழே விழுந்து கிடக்கும் தன் குழந்தையைக் கண்டு மதிமயங்கி, பிராணனையற்றுக் கீழே விழுந்து, பின்பெழுந்து, அதை மோந்து மோந்து பார்த்து, அதன் மேல் தேரோடியிருப்பதைக்கண்டு, பெருமூச்சுவிட்டு ஆவென்றலறி மறுமுறையும் மூர்ச்சை பட்டுக் கீழே விழுந்தது. அதன் கண்களினின்றும் கண்ணீர் தாரைதாரையாகப் பெருகிற்று. மறுபடியும் எழுந்து ஓவென்றலறிற்று. பின்பும் கீழே விழுந்து புரண்டது. பின்பெழுந்து தன் குழந்தையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தது. 'ஹோ' வென்றலறிக்கொண்டு பக்கங்களில் கிடந்த தழைகளைச் சேர்த்துக் கன்றை மூடிவிட்டு அழுதுகொண்டே அரண்மனையை நோக்கிச்சென்றது. ஆங்கு அரண்மனைவாயிலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அசைத்துக் கம்பீரமான ஓர் சப்தத்தை எழுப்பியது. உடனே அங்கிருந்த காவலாட்கள் "இதுகாறும் ஒருவராலும் அசைக்கப்படாத இவ்வாராய்ச்சி மணி இன்று அசைந்ததே! என்ன விபரீதமோ" என்று மனம் கலங்கி, அரண்மனைக் [illegible]

ந்து, "ஐயனே! சாதுவான ஓர் பசு அரண்மனை வாயிலில் வந்து ஆராய்ச்சி மணியை ஆட்டியது" என்று பணிந்து உரைத்தனர்.

அதுகேட்டு அரசன் திடுக்கிட்டு, ஓடிவந்து, ஆராய்ச்சிமணிக்கருகில், உடல்மெலிந்து, பெருமூச்செறிந்து, நடுநடுங்கி நிற்கும் தாய்ப்பசுவைக்கண்டு மனம் பதைத்து, அறிவழிந்து "ஐயோ! இவ்வாயில்லா ஜீவனுக்கு என்ன இடரிழைந்ததோ! இதைஅறியச் சக்தியற்றவனாயிருக்கின்றேனே! கோக்களைக்காப்பதன்றோ கோக்களின் கடமை. அப்படியிருக்க, இக்காராம்பசு மடிநிறையப் பால் சுரக்கக் கண்களில் நீர்வடியக் கதறிக்கொண்டு வந்து நிற்கின்றதே!" என்று மிகவருந்தித் தன் பக்கங்களில் வந்துநிற்கும் மந்திரிகளை நோக்கிக் கடுமையான முகத்துடன் "நீங்கள் எனக்கு மந்திரித்துவம் செய்வதும், நான் அரசுபுரிவதும் வெகு நன்று! இவ்வரும் பசுவுக்குத் துன்பம் நேரிடும்படி நான் ராஜ்ய பரிபாலனம் செய்வது வெகு உயர்வு! உங்கள் ஜாக்ரதையும் பாதுகாப்பும் இந்தகையதோ! அதன் துன்பத்திற்குக் காரணம் என்ன? உடனே சொல்லுங்கள்" என்று வெகு கோபமாகக்கேட்டான்.

மந்திரிகள் அனைவருக்கும் அதன் காரணம் தெரியுமாயினும் சொல்வதற்கு அஞ்சினவர்களாய் வாய் புதைத்து நின்றனர். மனுச்சக்ரவர்த்தியின் கோபத்தைக்கண்டு அஞ்சினர். எப்படியும் அவர்களே உரைத்துத் தீரவேண்டியதெனக் கண்டுகொண்டு, அவர்களுள் தலைவரான ஒரு மந்திரியானவர், உடல் நடுங்கி, மனம்பதறி, மெல்லிய குரலுடனே,

"வளவநின் புதல்வனங்கோர் மணிநெடுந் தேர்மேலேறி
யளவிறேர்த் தானைசூழ வரசுலாந் தெருவிற் போங்கா
லிளையவான் கன்றுதேர்க்கா லிடைபுகுந் திறந்ததாகத்
தளர்வுறு மித்தாய்வந்து விளைத்ததித் தன்மையென்றான்."

அச்சொல்லானது வெந்த புண்ணில் வேலுருவி யதுபோல் அவன் புண்பட்ட காதினுள் நுழைந்தது. அவன் ஒன்றுந்தோன்றாமல் சற்றுநேரம் சோர்ந்து, பின்பு அமைச்சர்கள் செய்த உபசாரங்களால் தேர்ந்து "ஐயோ! இப்பசுவின் துன்பத்திற்கு நானே ஆளாயி னேனே! பசுக்களையெல்லாம் புஷ்டிக்கச்செய்வது என் கடமையாயிருக்க அதை வதைக்கவோ நான் வயிறு திறந்தேன். கன்று அருகிலிருந்து தன் சபல புத்தியால் 'அம்மா; அம்மா' வென்று அலறும் சுபா வமுள்ள இத்தாய்ப்பசு தன் குழைந்தை இறந்ததைக் கண்டு என்ன பாடுபட்டதோ? ஐயோ! அடிக்கடி பெரு மூச்சுவிட்டு அலறுகின்றதே! எந்த துஷ்டமிருகம் வரினும் தன் உயிரைக்கொடுத்துத் தன் கன்றைக்காப் பாற்றும் தன்மையுள்ளதன்றோ இப்பசு! ஐ யோ! விழலினிடத்துள்ள நிழலைப்போல் என்னை நம்பியன் றோ இப்பசு இங்கு வந்திருக்கின்றது! நான் எவ்விதம் அதற்கீடு செய்யப்போகின்றேன். இயமனிடம்போ ன உயிர் எனக்கெவ்விதம் கிடைக்கப் போகின்றது! என் முன்னோர்களிலொருவர் தம்மரசாட்சிகாலத்தில், ஓர் அந்தணனின்புதல்வன் அகாலமரணமடைய, அதை த்தாங்காது தன் வலிமையால் இயமலோகத்தினின் றும் உயிரை மீட்டு வந்ததோடும், தனது நாட்டில் இயமவாதனையில்லாமல் செய்த அச்சோழவமிசத்தில் நான் பிறந்தும் ஒன்றும் செய்யச் சக்தியற்றவனாயிருக் கின்றேனே! என் வமிசத்தில் இதுகாறும் இத்தகைய கொடிய சம்பவம் நடந்ததில்லையே! இதற்கு நானோ வாய்த்துக்கொண்டேன்! ஐயோ! நம் குலத்திற்கும் ஒரு மைந்தனிருக்கின்றானென்பதைப் பெருமையாக வெண்ணிக் கர்வங்கொண்டேனே! இவ்விதத் தீராப்ப ழிக்கு அவன் ஆளாயினனே! அவன் கற்றவைகளெ ல்லாம் வீணாயினவே! ஐயோ! இப்படிச் சம்பவித்து விட்டதே! என்ன பாபம் செய்தேனோ? ஏழைகளைத் துன்புறுத்தினேனோ? ஊன் சுவை உண்டு உயிர் வளர்

த்தேனே? சத்குஞானிகளை அவமதித்தேனே? குரு மொழி தட்டிநின்றேனே? தந்தைத்தாய் மொழியை த்தள்ளி நடந்தேனே? இன்னதென்றறியேனே! என்ன செய்வேன்! இன்னும்நான் உயிருடன் இருக்கின்றேனே! என் செங்கோல்தான் என்ன?" என்று பலவாறு பிரலாபித்துப் பின்பு உறுதியாக "இப்பழிக்குப்பழி வாங்குவதே சரி. எவ்விதம் இதன் கன்றைக் கொன்றானோ அவ்விதமே அக்குற்றவாளியும் தன் உயிரை இழக்கக்கடவன்" என்று கூறினான்.

அதைக்கேட்டு அமைச்சர்கள் வெகு நடுங்கி, கைகுவித்து "மன்னனே! சகலமுமறிந்த தங்களுக்கு நாங்கள் உரைப்பதுமுளவோ! தங்கள் மைந்தன் அறியாமற்செய்த ஓர் சிறிய பிழைக்கு வமிசக்கேடு விளைக்கும்படியான இத்தீர்ப்பையோ சொல்வது? விதிவசத்தாலேயே வலியவந்து உயிர்விடுத்த மிருகத்திற்காகத் தாங்கள் இப்படி உரைக்கலாகாது! நீதிவிடங்களைப்போல் ஜீவகாருண்யமுள்ளவன் வேறெவருமில்லை. அவன் அக்கன்றைக்கண்டு கூறிய மொழிகள் எங்கள் மனத்தில் நன்றாய் பதிந்திருக்கின்றன. ஆகையால் தாங்கள் தங்கள் மைந்தன் மீது விதித்த தண்டனையை மாற்றவேண்டும்" என்று பலவாறு மன்றாடினார்கள். பலநியாயங்களை எடுத்துக்கூறி, மைந்தனைக்கொல்வது அநியாயம் என்று சாதித்தார்கள். இத்தகைய பாதகத்திற்குச் சரியான பிராயச்சித்தங்கள்செய்வதே முன்னோர்களின் வழக்கமென்றார்கள். அதைக்கேட்டு மன்னவன் விசனத்துடன் புன்னகை கொண்டு, "மந்திரிகளே! நீங்கள் சொல்வது வெகுநன்று! உங்கள் வார்த்தை உங்களுக்குத்தான் அழகைக்கொடுக்கும். அமைச்சர்களாயிருப்பவர்கள் மன்னவன் மனம் மாறுபடினும் நியாயவழியன்றோ கூறவேண்டும். இதுகாறும் எனக்கு நல்வழியே புகட்டிவந்த உங்கள்மனம் இன்றேன் மாறவேண்டும்? காவலன் என்பவன்யார்?

"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந் தீர்த் தறங்காப்பா னல்லனே?"

அவ்வண்ணமிருக்க, எனக்கு இப்புத்தி புகட்டுவதும் அழகோ?. கொலைக்கு மறுகொலை யல்லாமல் வேறுசிட்சை யேதேனும் உண்டோ? குற்றவாளி எனக்கு உறவினன் என்றால் பழியின் பாரம் குறையுமோ. இதுதான் வழக்கமென்றுரைக்கின்றீர்கள்.

வழக்கென்று நீர்மொழிந்தான் மற்றதுதான் வலிப்பட்டு
குழக்கன்றை யிழந்தலறுங் கோவுறுநோய் மருந்தாமோ?
இழக்கின்றேன் மைந்தனையென் றெல்லீருஞ் சொல்லியவிச்
சழக்கன்று நானிசைந்தாற் றருமந்தான் சலியாதே?

அமைச்சர்களே! உயிர் எவ்வளவு அற்பமாயினும் அதை எவர்க்கும் எடுக்கவதிகாரமுண்டோ? இனையளவு உயிர் கொடுக்கவும் சக்தியற்ற நாம் அதன் உயிரை எடுக்க என்ன பாத்தியதையைப் படைத்திருக்கிறோம்? இப்பசுவினுயிரை அற்பமென்கிறீர்கள். எவ்வுயிரும் அற்பமில்லை யென்பது என் எண்ணம். மேலும் பசுக்கள் ஜீவப்பிராணிகள் எவற்றிலும் மேம்பட்டனவையன்றோ? அவைகளைவிடச் சாதுவான மிருகங்களும் உலகில் இருக்கின்றனவோ? அவைகளின் பால் தேவர்களுக்கும் உபயோகமாகின்றனவே! இறந்துபட்ட இப்பசுங்கன்று பரமேசுவர வாகனமாகிய நந்தியின் அம்சமன்றோ? ஆதலால் இதனை அற்பமெனக்கூறுவது பிசகு. ஒருகுற்றமுமில்லாமல் ஓங்கிவந்தஎன் வமிசத்தைக் கெடுக்கவந்த அவ்விளைஞனுக்குத் தண்டனை விதிக்கும் விஷயத்தில் தாங்கள் மறுப்பு கூறலாகாது. ஞாயமென்பது எனக்கொன்று பிறர்க்கொன்றோ? என்பெயரும் மனு வென்பது பொருந்துமா? உங்கள் சொல்லைக்கேட்டால் என்குலத்தையே கெடுத்தவனாகின்றேனல்லனோ?

என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செய விசைந்தே
யன்னியனோ ருயிர்கொன்றா லவனைக்கொல் வேனானாற்றத்தை
றொன்மனுநூற் றொடைமனுவாற் றுடைப்புண்ட தெனும்வார்
மன்னுலகிற் பெறமொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்றான்.

விதியென்பது எனக்கொன்று பிறர்க்கொன்றில்லை. ஆதலால் அவனைக்கொல்வதே முடிவு." எனக்கூறிக் கலாவல்லபனென்னும் ஓர் மந்திரியை விளித்து "மந்திரியே! நீர் சென்று அவ்வீதிவிடங்களைப்பசுங்கன்று கிடக்குமிடத்தில் வீழ்த்தித் தேர்ச்சக்கரத்தால் அவனை அரைத்துவாரும்" என்று ஆஞ்ஞாபித்தான்.

அதைக்கேட்டு அம்மந்திரி "இவ்வாஞ்ஞையை எனக்கா இடவேண்டும்? ஐயோ! அரசராஞ்ஞையாயிற்றே! என்னசெய்வேன்! எவ்விதம் இக்கொடிய காரியத்தைச் செய்வேன். என் கண்ணுக்குக் கண்ணான இவ்வீதிவிடங்கனை எவ்விதம் கொல்வேன்' என்று பலவாறு மயங்கிக் கடைசியாகச் "சரி! வீதிவிடங்கன் செய்த பாபத்திற்காக என்னுயிரை விட்டுவிடுகின்றேன் அப்படிச் செய்வதால் நான் ஒருபாபத்திற்கும் ஆளாகாதவனாவேன்" என்று தீர்மானித்துக் கொண்டு, வீதியில் வந்து தன் உடைவாளை யெடுத்துத் தன் கழுத்தை யரிந்துகொண்டு கீழே விழுந்திறந்தான்.

இச்செய்தியை சில ஒற்றர்கள் அரசனுக்குத் தெரிவித்தனர். இதனைக் கேட்ட அரசன் மனம் எவ்விதம் இருக்கும்! அதைக்கேட்டு வெந்தபுண்ணில் அம்புபட்டதுபோல் அரசன் துடிதுடித்து, மனம் வெதும்பி "ஐயோ! கன்றின் பழி போதாதென்று கலாவல்லபன் பழியும் வந்து சூழ்ந்ததே! கப்பல் உடைந்து கலங்கும்போது தெப்பமும் உடைந்ததே! இதற்கென்ன செய்வேன்! ஏ! கலாவல்லபரே! நீரும் எனக்கு இடர்விளைக்கக் கருதினீரே! சரி! அறிவில்லாமல் நான் செய்த... [illegible] வருந்தி யாது

பயன்? கன்றின் கொலைக்காக வீதிவிடங்கனின் உயி ரையும், மந்திரியின் சாவுக்காக என் உயிரையும் விடைப்பேன்'' எனத் தீர்மானித்துக்கொண்டு, தனது புத்திரனை யழைத்து வரும்படி கட்டளையிட்டான்.

காவற்காரர்கள் வெகு வருத்தத்துடன் இளவரசனிருக்குமிடத்தை யடைந்து யாது சொல்வதென வறியாமல் அழுதுகொண்டு நின்றனர். இதற்குள்ளாக, பசு அரண்மனைக்குச் சென்ற விஷயத்தைக் கேள்வியுற்ற வீதிவிடங்கன் "இனி எனக்குப் பிராயச்சித்தம் எதற்கு? என்பிதா எவ்விதம் முடிவு செய்கின்றனரோ அதுவே எனக்குத் தகுதியானது'' என்று சும்மாவிருந்தான். அவன் காவலாளர்களின் முகக்குறியினின்றும் இன்னதுதான் நடந்திருக்க வேண்டுமென்று ஊகித்து, அவர்களைநோக்கி காவலாளர்களே! பயப்படாமல் நடந்தகாரியத்தை உரையுங்கள்'' என அவர்களும் மெதுவாக விஷயங்களை அறிவித்தனர்.

அதைக்கேட்டு அரண்மனை முழுவதும் ஹோ வென்றலறவாரம்பித்தது. அவனது உறவினர்கள் யாவரும் அங்குவந்து கூடி 'ஐயோ! இவன் விதி இப்படியா இருக்கும் என்று கதறினார்கள். இச்சமாசாரம் அவன் தாய்க் கெட்டவும் அவள் அங்கேயே மூர்ச்சித்து விழுந்து, பின்பு மெதுவாய் எழுந்து, வீதிவிடங்கனிருக்கும் இடத்தை யடைந்து அவனைக் கட்டிக்கொண்டு கதறினாள். இராஜகுமாரன் அவர்கள் எல்லோரையும் நமஸ்கரித்து "என்னைப் பெற்றெடுத்த தாயே! உறவினர்களே! பாபியேன் செய்த ஓர் பெரும் பாதகத்திற்கு எவ்விதத் தண்டனையும் ஈடாகாது. என்னைப்பெற்றெடுத்த தாய்க்கும் மற்றவர்க்கும் நான் இழிவைக் கொண்டுவந்தேன். ஆதலால் என்னைக் குறித்து நீங்கள் ஒருவரும் துக்கிக்கவேண்டுவதில்லை. அல்லாமலும், விதியைக்கடக்க எவரால் முடியும்? அன்றியும், நாற்றம் நிரம்பிய இவ்வற்பவுடல் என்றும்

சதமோ! என்று பிறப்புண்டோ அன்றே இறப்புண்டல்லவா? அப்படியிருக்க, நீங்கள் ஏன் வருந்த வேண்டும்? துயரப்படாதீர்கள்" என்று சொல்லிக் காவற்காரர்களுடன் நடந்தான்.

அரசன் தன்மைந்தனைக்கண்டதும், அவன்முகத்தைக்கூட ஏறிட்டுப்பாராமல் வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு, "இவன் சாதுவான ஓர் பசுங்கன்றைக் கொன்றதனையால் இவனும் கொலை செய்யப்படுவதற்குத் தக்க குற்றவாளியாகின்றான்" என, வீதிவிடங்கன் நமஸ்கரித்து "இப்பழியை நான் அப்பொழுதே தீர்த்துக்கொண்டிருப்பேன். ஆனால் தேவரீர் கட்டளையை எதிர்பார்த்து நின்றேன்' என்றான். உடனே அரசன் கொலையாளிகளைக் குறித்து 'இக்குற்றவாளியைக் கைது செய்து, கடுங்காவல் புரிந்து, கன்று இறந்துகிடக்கும் இடத்தில் கொண்டுபோய் கிடத்துங்கள்" என்று உத்திரவிட்டான்.

அவ்வண்ணமே அவ்வீரர்கள் அழுத கண்களுடன் கத்திகளைக் கையிலேந்தி, வீதிவிடங்கனைச் சூழ்ந்துகொண்டு சென்றனர். இக்கோலத்தைக்கண்ட மிருகங்களும் பக்ஷிகளும் கண்ணீர்சொரிந்து கதறின. மனிதர்கள் யாவரும் ஒன்றும் பேசத்தெரியாமல் விம்மினர். ஊர்முழுவதும் ஒரே அழுகுரலாயிருந்தது. ஆகாயத்திலும் இவ்வதிசயத்தைக்காண தேவர்கள் யாவரும் வந்துகூடினர். வீதிவிடங்கனின் ஒருஉயிருக்காக உலகம்முழுமையும் உயிர்விடக்காத்திருந்தது.

இதற்குள்ளாக அரசனுஞ்ஞையால் காவல்செய்யப்பட்ட வீதிவிடங்கன் தியாகேசர் சன்னதிக்கு வந்து "சிறுபிள்ளைக்குத் திருப்பாற்கடலை யழைத்துக்கொடுத்த தியாகேசா! அகண்டபரிபூரண சச்சிதானந்த ஸ்வயம்பிரகாச ஸாட்சாத்கார சின்மயனாகியசிவசங்கரனே! அடியேன் பசுங்கன்றைக்கொன்ற மகாபாபியானேன். அதுவும்போதாமல் என் குருவாகிய கலாவல்லபனென்னும் மந்திரியையும் இறப்பிப்பதற்கு காரணமாயி

ருந்தேன். இப்படிப்பட்ட பாபிகள் இவ்வுலகத்தில் எங்கேனும் உண்டோ? என் பிதா எனக்கு விதிக்கும் இத்தண்டனை போதுமானதோ? என் ஐயனே! என்னசெய்வேன்! பாபியாயினும் எனக்கு வேறொரு கதியுமில்லை. எவ்வளவு கொடியபாதகம் செய்தவரையும் தாங்கள் மன்னித்தருளவில்லையா? அதேமாதிரி என்னைப் பற்றியிருக்கும் பழிகளைநீக்கவேண்டும். என்பொருட்டு இறந்த மந்திரியை எழுப்பித்தரல்வேண்டும். பிரபுவே! இதோ இவ்வற்ப வுடலைப் போட்டுவிட்டு வருகின்றேன். என்னைத் தம் திருவடி நிழலில் சேர்த்துக்கொள்ளல்வேண்டும். திருவடிகிடையாதானாலும் மறுபிறப்பிலாயினும் கிடைக்கத்தக்க நல்லறிவு புகட்டவேண்டும்.'' எனப்பிரார்த்தித்தன் மாதா பிதா குரு முதலானோரையும் இஷ்டதெய்வத்தையும் தியானித்து, மனதுக்குள்ளேயே அவர்களுக்குத்தண்டனிட்டு, பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்து, வடக்கேதலையும்தெற்கே காலுமாக சிவத்தியானம் செய்துகொண்டே உடம்பைக்கிடத்தினான்.

மனுச்சக்ரவர்த்தியும் தியாகேசர்சன்னதியை அணுகி, "என் ஆண்டவனே! வீதிவிடங்கனென்னும் இவன் பசுங்கன்றைக் கொன்றான். கொலைக்குக் கொலையே தண்டனையென்று நூல்களில் விதித்தபடி இதோ இவனைத் தேர்க்காலிலிட்டே கொல்விக்கின்றேன். இதில் ஏதேனும் குறைநேரிடுமானால் என்னைமன்னிக்கவேண்டுகிறேன். இப்பாபாத்மாவின் பாபம் இத்துடன் நீங்கி மறுபிறப்பிலாயினும் இவன் நற்கதியையடையும் வண்ணம் தாங்கள் அனுக்ரகம் செய்ய வேண்டும்.'' என்று பிரார்த்தித்துக்கொண்டு, வெளியேவந்து, தேரின்மேலேறி, நேராக வீதிவிடங்கன் கழுத்தில் ஓர்சக்கரம் ஏறும்படியாகத் தேரை நடத்தினான். குதிரைகள் வேகமாகச்செல்ல வீதிவிடங்கன் கழுத்தின்மேல் தேர்ச்சக்கரங்கள் ஏறி கறகறவென்றழுந்த சார்பிழிந்த கனிபோல் வீதிவிடங்கன் உடல் சின்னாபின்னமாகிக் கிடந்தது. ஜனங்கள் யாவரும்

ஐயோ! இனி எக்காலத்தில் வீதிவிடங்கனைப் பார்ப்போம்,, என்று கதறினார்கள். தேவர்களெல்லாரும் "தன் பிள்ளையென்றும் பாராமல் நீதிசெலுத்தும் மன்னனே! உன் கீர்த்தி என்றும் நிலைபெறட்டும்." என்று வாழ்த்தி பூமாரி பொழிந்தனர். கன்றின் பழிதீர்ந்தானபின்பு, மனுச்சோழன் மந்திரியின் பழிதீர்க்கும் பொருட்டு தேரிலிருந்து கீழே யிறங்கினர்.

அத்தருணத்தில், ஸ்ரீ தியாகேசன் இனி அம் மன்னனைச் சோதித்தல் தகாதெனக் கருதி,

"சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும
இடைமருங்கி லுமையாளும் மெமமருங்கும் பூதகணமு
புடைமருக்கும் பெருமையுமு" ... ...

கொண்டுகாட்சி கொடுத்தருளி, கருணை நிறைந்த தன் கண்களால் சோழமன்னனை நோக்கி "என் அன்பனே! நீ நம்மிடத்தில் வைத்துள்ள அன்புக்கும் நீதி முறையில் கொண்ட நடுத்தன்மைக்கும் மெச்சினோம். உன் நடுவுநிலைமையைப் பரிசோதித்து உலகத்தாருக்கு அறிவிக்கும் வண்ணமே யாம் இக்கூற்றை ஏவினது. இனி ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். உன குலமும் உன்பெருமையும செழித்தோங்கட்டும்" என்று அருளி மறைந்தார். உடனே இறந்துகிடந்த கன்று, மந்திரி, அரசிளங்குமாரன் இம்மூவரும் தூங்கி எழுபவர்போல் எழுந்தனர். யாருக்கும் முன்னவனை முன்னின்றால் முடியாதபொருளுண்டோ?

இவ்வைபவத்தைக் கண்டோர் எவரும் "என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!" என்று கூத்தாடினர். யாவரும் வீதிவிடங்கப் பெருமானை ஸ்தோத்திரம் பண்ணினர். கன்று தாயுடன் போய்ச் சேர்ந்துகொண்டது. அரசனும் அரசியரும் தன்குமாரனை மார்போடணைத்து "என்னருஞ் செல்வனே! இன்றே உன்னைப் பெற்றெடுத்தோம். தியாகேசன் தரிசனம் செய்துவிக்கும் மகா புருஷனே! நீயே உத்தமன்" என்றனர். ஜனங்கள் யாவரும் ஆரவாரித்தனர். தேவர்கள் கானம் பாடினர். எங்கும் மங்களம் விளங்கிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!

அபிப்பிராயங்கள்.

சேது சமஸ்தானப் புலவரும், மன்னார்குடி பிண்ட்லே
காலேஜ் பிரதம தமிழ்ப்பண்டிதருமான
ஸ்ரீமான்
சர்க்கரை இராமசாமிப்புலவரவர்கள்
இயற்றியது.

மன்னர்புக ழாங்கிலநேர் வார்கண்மநு நீதிகண்ட
வளவன் முன்னாத்
தன்னிகர்செங் கோலவேந்தர் சரிதாதி யிதிகாச
சார மெல்லாம்
புன்னுமகங் கைக்கனிபோற படித்தறிந்து மெய்ஞ்
பாவை மூழ்க [ஞானப்
புன்னிமறை யோர்திலகன் விசுவநா தன்னெழுதி
யுதவி னானே.

OPINION.

VELLORE
24—8—18

I had a delightful half hour with your CHOLA KING. It is the sort of booklet that appeals to young minds and the booklet should be read by every school going child. Hope your other booklets would be equally useful.

Yours sincerely
V. R. Duraiswami Sastri, M. A. L. T.
Assistant Inspector of Schools,
NORTH ARCOT.

விஞ்ஞாபனம்.

சிறியோர்களின் முன்னேற்றத்தை என்றும் கருத்திற்கொண்ட பெரியோர்களுக்கோர் விஞ்ஞாபனம்.

கனவான்களே !

ஒழுக்கப்பயிற்சி, மதப்படிப்பு இவைகள் அவசியமென மதிக்கப்படும் இக்காலத்தில் புராணங்களினின்றும் எடுக்கப்பெற்ற கதைகளும் சம்பவங்களும் என்ற இவ்வரிசை தங்களுடைய அன்பான கவனத்தைக் கவருமென எண்ணுகின்றேன். ஒழுங்கான பழக்கமும் சேர்க்கையுமே ஒழுக்கப்பயிற்சிக்கு மூலகாரணமாயினும், அவைகளுக்கு உபகரணமாக நல்லோர்களின் சரிதைகள் பெரியோர்கள் எழுதியவண்ணம் கற்பிக்கப்படுமேயானால், அவைகள் பாலியர்களின் நோக்கங்களைச் சீர்ப்படுத்தி உயரிய லக்ஷ்யங்களைக் கொள்வதற்கு உதவியாயிருக்கும் என்பது பலரின் துணிபு. அவ்வெண்ணமே சிறியோன் ஆரம்பித்த இக்காரியத்திற்கு தூண்டுகோலாகும். இவ்வரிசையில் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், ஸ்காந்தம், பாகவதம், பாரதம், இராமாயணம் முதலிய பல உயரிய நூல்களினின்றும் அரிய பல சரிதைகளை சிறிய புத்தகங்களாக வெளியிடலாமென்று எண்ணப்பட்டிருக்கின்றது. கண்ணப்பன், சிறுத்தொண்டன், திருநாவுக்கரசு, சோமாசீமாரன், சுந்திரர் முதலான பல கதைகள் இப்பொழுதே தயாராகின்றன. ஆயினும் அவைகளுள் எவையும் வெளியாகுமுன் பெரியோர்களின் உதவி வெகுவாய் தேவைப்படுகின்றது. எதுவும் விலையுயர்ந்த இக்காலத்தில் நூல்களினவசியத்தையறிந்த நல்லோர்களினுதவி எவ்விதமாயினும் அதனை இப்பதிப்பாசிரியன் பெரிதும் பாராட்டி நன்றியுணர்பவனாவன்.

இங்ஙனம், தங்கள் ஊழியன்

R. விசவநாதன்.

நடகொண்டான், [illegible].